வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 234 of 2003

வழக்கு சாட்சி - PW 16

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. மாதையன் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| தந்தை பெயர் | : | ரெங்கசாமி | வயது | : | |
| கிராமம் | : | பல்லடம் காவல் நிலையம் | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 04.03.2026.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 04.03.2026.**

1) நான் தற்போது பல்லடம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் ராமசாமி, புலன் விசாரணை மேற்கொண்ட காவல் ஆய்வாளர் திரு. சுப்பிரமணியம், மற்றும் ராமலிங்கம் ஆகியோர் இறந்துவிட்டதால் அவர்களது இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கு கோப்பு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 24.02.1996 ஆம் தேதி காலை 6.45 மணிக்கு பல்லடம் காவல் நிலைய தலைமை காவலர் திரு. ராமசாமி அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது திருப்பூர் அஞ்சலக துணை கண்காணிப்பாளர் பொறுப்பில் இருக்கும் திரு. தங்கவேல் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்து எழுத்து மூலமான புகாரை பெற்று பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 80/1996 சட்டப்பிரவுகள் 120(B),467,468,471,477(A),409 இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.68** ஆகும். அந்த முதல் தகவல்அறிக்கை அசல் மற்றும் புகாரின் அசல் ஆகியவற்றை கனம்

நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

2) மேற்கொண்டு புலன் விசாரணைக்காக பல்லடம் காவல் நிலைய ஆய்வாளர் திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கு வழக்கு கோப்பினை பார்வைக்கு வைத்துள்ளார். இவ்வழக்கினை மேற்படி ஆய்வாளர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் சாட்சிகள் தங்கவேலு, கிருஷ்ணக்குமார், குருநாதன், சரசு, அவிநாசியப்பன், பாலகிருஷ்ணன், கண்ணம்மாள், சாம்ராஜ், சண்முகம், ஸ்ரீமதி, மாரியம்மாள், கிருஷ்ணசாமி, கமலாம்பாள், வெங்கடாசலம், பாலன், பரிமலா, ரூக்குமனி, மங்கையர்கரசி, இமானுவேல், அங்கம்மாள், முருகன், ரெங்கசாமி, அம்புஜம், முருகவேல், மகாலெட்சுமி, கலைச்செல்வி, செல்வராஜ் மனைவி பரிமலா, மீனாட்சி, சகிலா பானு அன்வர், பங்காரு, ஹரிசங்கர் திவாரி, சந்திர காந்தி, செல்வராஜ், முருகன், பாலசுப்பிரமணயிம் ,, கிருஷ்ணவேனி, நாச்சி, சிவகாமி, சுசிலா, கல்யாணி, அமிரித் லால், , லட்சுமி, ஜெயலட்சுமி, ஜமீருதின், தண்டபானி, ஜமீலா பீவி, குருவம்மாள், ஈஸ்வரி, செல்வராஜ், சுசிலா, மயிலா, விஜயராகவன், பாத்திமா பீவி, சிவக்குமார், சங்கர், ராணி, கண்ணன், சரஸ்வதி, பழனிச்சாமி, ஆகியோரை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3) இவ்வழக்கின் எதிரி ராஜன் அவர்களை சாட்சிகள் அடையாளம் காட்ட 20.03.1996 ஆம் தேதி இருகூர் பிரிவில் வைத்து மாலை 5.00 மணிக்கு கைது செய்துள்ளார். எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் ஆறுமுகம், தங்கசாமி, ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ .69** ஆகும். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி எதிரி தான் குடியிருந்த 2/7 மார்கெட் ரோடு, இருகூர் வீட்டில் வைத்திருந்த தான் கைப்பட எழுதிய மதுரா மலர் சூப்பர் டீலக்ஸ் என்று எழுதப்பட்ட நோட் ஒன்றை சோதனை பட்டியல் மூலம் கைப்பற்றியுள்ளார். அந்த சோதனை பட்டியல் **அ.த.சா.ஆ. 70** ஆகும். பின்னர் எதிரியை

காவல் நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனைக்கு பின் பாரவசம் ஒப்படைத்துள்ளார். பின்னர் தக்க வழிகாவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

4) பின்னர் சாட்சிகள் ஆறுமுகம், தங்கசாமி, ஆகியோரை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் சமந்தப்பட்ட அசல் ஆவணங்களை ஒப்படைக்கோரி 23.06.1996 ஆம் தேதி திருப்பூர் அஞ்சலக கண்காணிப்பாளர் அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். எதிரி ராஜனின் மாதிரி கையொப்பம் பெறவேண்டி கனம் நீதிமன்றம் நடுவர் பல்லடம் அவர்களுக்கு கடிதம் கொடுத்துள்ளார். அந்த வேண்டுகோள் கடிதத்தின் பேரில் 28.01.1997 ஆம் தேதிஎதிரி ராஜன் அவர்களிடம் நீதிமன்றத்தில் வைத்து மாதிரி கையொப்பம் பெறப்பட்டுள்ளது.

5) பிறகு இவ்வழக்கு சம்மந்தப்பட்ட அசல் ஆவணங்களான 166 பட்டியல் கொண்ட வைப்பு நிதி கணக்கு பெறப்பட்டுள்ளது, 150 தினசரி வரவு செலவு பட்டியல், இவ்வழக்கின் 57 கணக்கு வைப்பீட்டாளர்களின் கணக்கு புத்தகம், லெட்ஜர்ஸ். 10 லாங் புக், ஆகியவற்றை அஞ்சலக கண்காணிப்பாளர் அவர்களிடம் பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். இவ்வழக்கின் சாட்சிகள் அவிநாசியப்பன்,கிருஷ்ணசாமி, கமலாபாய், நாச்சி, செல்வராஜ், லட்சுமி, வெங்கடாசலம், சி.பாலன், முருகவேல், முருகன், மீனாட்சி, சகீலா பானு, பங்காரு,ஹெ எஸ் திவாரி, சி.முருகன், ஆர்.ஈஸ்வரி, மயிலா, சுசீலா, விஜய ராகவன், பழனிச்சாமி, ஆகிய 20 நபர்களுக்கு மாதிரி கையொப்பங்களை தக்க வேண்டுகோள் கடிதத்தின் மூலம் கனம் நீதிமன்றத்திற்கு பெறப்பட்டுள்ளது.

6)பிறகு இவ்வழக்கில்சம்மந்தப்பட்ட அசல் ஆவணங்களான HO. Ledger, மாதிரி கையொப்ப கார்ட் SB 7 எதிரி ராஜன் அவர்களின் வாக்குமூலம், கணக்கு வைப்பீட்டாளர்களின் வாக்குமூலங்கள், எதிர சி.ஆர்,மணி அவர்களின் வாக்குமூலத்தை பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். எதிரியின் கையொப்பம் சாட்சிகளின்

கையொப்பம் ஆகியவற்றை ஒப்பீடு செய்ய வேண்டி தடய அறிவியல் துறை சென்னை அவர்களுக்கு 29.05.1997 ஆம் தேதி நீதிமன்ற வேண்டுகோள் கடிதத்துடன் காவலர் திரு. ஸ்ரீராமன் அவர்கள் ஒப்படைத்துள்ளார். 13.02.1999 ஆம் தேதி தடய அறிவியல் ஆய்வகம் சென்னையில் இருந்து ஆய்வக அறிக்கையை பெற்று காவலர் திரு. ராஜ்குமார் அவர்கள் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார்.

7) இவ்வழக்கில் இரண்டாம் எதிரி சி.ஆர்.மணி அவர்கள் நீதிமன்றத்தின் மூலம் முன்ஜாமின் பெற்றுள்ளார். இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 31.01.2001 ஆம் தேதி ஆய்வாளர் திரு.ராமலிங்கம் அவர்கள் எதிரிகள் மீது சட்டப் பிரவுகள் 120(B),467,468, 471,477(A),409 இதச வின் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

(மேற்படி தடய ஆய்வறிக்கையை குறியீடு செய்வதற்கு எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதால் தடய அறிவியல் நிபுணர் மூலம் விசாரிக்க வேண்டியுள்ளதால் முதல் விசாரணையின் தொடர்ச்சி வேறு ஒரு நாளுக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.03.04 18:49:28 +0500

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.